https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# மரபும் மரபிலக்கணமும்

**மி. ஜெயின் கிறிஸ்டி**
தமிழ்த்துறை
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன்**
பேராசிரியர் & நெறியாளர்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை – 600117

முன்னுரை

மரபு என்பது ஒருவரால் எடுத்தாளப்பட்டுப் பின்னர் பலராலும் பின்பற்றப்படுவதொன்றாகும். ஒரு மரபைத் தனியொருவர் தொடங்கி வைக்கலாம்; ஆனால், தோற்றுவிக்க முடியாது. அதாவது தனியொருவரால் தொடக்கி வைக்கப்படுகிற ஒன்று. பரவலாக எல்லோராலும் ஏற்றுக் கொல்லப்படுகிற போது. அது 'மரபு' என்னும் குறியீட்டைப் பெறுகிறது.

'மரபு' சொற்பொருள் விளக்கம்

மரபென்ற பொருண்மை என்னையெனின் கிளவியாக்கது

மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவு மன்றி

இருதிணைப் பொருட்குணமாகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்று முறைமையும் உயர்திணை

தியுநான்கு சாம் பற்றிய மரபும் அஃறிணைப் புல்லும்

மரனும் பற்றிய மரபும் அவை பற்றி வரும் உலகியல் மரபும் நூன் மரபும் என இவையெல்லாம் மரபெனப்படும்."[1] என்று வரையறுத்தார் பேராசிரியர்.

மரபென்பதனை வரலாற்று முறைமை என்று பொருத்தமுற வரையறுத்த பேராசிரியரின் நுட்பம் வியத்தற்குரியது.

> மீன்திகழ் விசும்பின் பாய்இருள் அகல
>
> ஈண்டு செலல் மரபின் தன் இயல் வழாஅது"[2]

என்னும் புறநானூற்றுப் பாடலில் வழங்கியுள்ள மரபு என்னும் சொல்லுக்கு "முறைமை" என்பது பொருளாகக் கருதப்படுகிறது.

'இசை மரபு ஆக' நட்புக் கந்து ஆக என்னும் அடியில் வழங்கி வரும் மரபு என்னும் சொல்லுக்கு **மேம்பாடு** என்று பொருள் கூறப்படுகிறது.

**துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்**

**என்னை சொல் ஏதிலார் மாட்டு"**[3]

என்னும் குறளில் மரபு என்பது **இயல்பு** என்னும் பொருளில் வழங்கப்படுகின்றது. (மரபினார்-இயல்பை உடையார்) அதேபோல் திரிகடுகப் பாடலில் **சேய்மரபு** என்பது இளமைப்பருவம் என்ற பொருளிலும் சீவகசிந்தாமணியில் மரபு என்பதற்கு **வழிபாடு** என்னும் பொருளைச் சுமந்து நிற்கிறது.

**துன்னியோர் ஓலை நீட்டித் தொழுதனன் பெயர்ந்து நிற்ப**

**மன்னிய குருசில் கொண்டு மரபினால் நோக்குகின்றான்"**[4]

மரபு என்னும் சொல்லைப் பல்வேறு இலக்கியங்களில் **வமிசம், பாரம்பரியம், முறைமை, தொன்மை**, என்ற பொருள்கல் கையாண்டுள்ளதை அறிய முடிகிறது.

மேலும் மரபு என்னும் சொல்லைப் 'புகழ், பெருமை' என்னும் பொருண்மைகளில் 'பணவிடு தூது' கையாண்டுள்ளது.

**"உன் மரபு சொல்ல ஒரு கோடி நாள் செல்லும்**

**என் மனதில் வந்தது இயம்புவேன்"**

என்பது பணவிடுதூது சேது புராணத்தில், நீதி நியாயம் என்னும் பொருளில் மரபு வழங்கியுள்ளது.

பல்வேறு காலங்களில் மரபு என்பதற்குப் பலவகையான பொருண்மை இருந்ததை இலக்கியச் சான்றுகளில் அறிய முடிகிறது.

**மரபு - வரையறை**

மரபு என்னும் சொல் தொல்காப்பியத்தில் பயின்று வந்துள்ளது. "நூன் மரபு" "மொழி மரபு", "தொகை மரபு", "விளி மரபு" என்று இயல்களில் பெயர்களிலேயே "மரபு" எனும் சொல்லைத் தொல்காப்பியர் கண்டுள்ளார். மேலும் மரபுணர்த்தற்கென்றே பொருளதிகாரத்தில் மரபியல் எனும் தனியியல் அமைத்துள்ளார். இவ்விடத்திலெல்லாம் 'மரபு' எனும் சொல் இலக்கணம் அல்லது தொன்று தொட்டு வழங்கி வரும் 'முறைமை' என்ற பொருள்களில் கையாளப்பட்டுள்ளது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னால் இம்மரபு எனும் சொல் இலக்கணப் பொருள்களைத் தாண்டி வழக்குச் சொற்களுக்கும் வரையறுக்கப்பட்டது.

மரபு என்ற சொல் இலக்கண நூல்களின் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. தொல்காப்பிய மரபியல் உள்ள மரபு" என்ற சொல்லுக்கும் நூன்மரபு, மொழி மரபு ஆகியவற்றிலுள்ள "மரபு" என்ற சொல்லுக்கும் பொருள் வேறுபாடு உண்டு. நன்னூலில் வரும் மரபு, மரபு வழுவமைதி ஆகியன குறிப்பதும், தொல்காப்பியத்தில் வரும் மரபு என்ற சொல்லும் ஒரே பொருள் தருவன அல்ல. எனவே மரபு என்பது அவரவர்கள் எடுத்துக் கொண்ட பொருள் நிலைகளை விளக்குவதாக அமைந்துள்ளது.

**மரபு பற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்து**

**மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்**

(மர -1)

**திரிவிஇல் சொல்லோடு தழாஅல் வேண்டும்**

(மர- 91)

**மரபு வழிப்பட்ட சொல்லினானே** (மர - 92)

**மரபே தானும்**

**நாற்சொல் இயலான் யாப்புவழிப் பட்டன்று**

(தொல். செய். 74)

எனத் தொல்காப்பியர் உரைப்பதால் மரபு மாற்றுவதற்கு அரிய சிறப்பினது, பெயர், வினை, இடை, உரி ஆகிய நாற்சொல் திரிபின்றி வழங்குவது மரபுவழி வழியாக வந்த சொல்லினது ஆகிய விளக்கங்களை அறிய முடிகிறது.

மேலும் இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமை (மர.89) என்னும் வரியில் உள்ள இயல்நெறி என்பது மரபு, இலக்கண முறைமை என்னும் பொருளுடையதாகிறது. "தொன்றியல் மருங்கின்" (தொல்.237)

"பாண்டியல் மருங்கின்" (தொல்.574) எனவும் கூறியுள்ளார்.

"வழக்கா றல்ல செய்யு ளாறே" (தொல்.501) என்பதால், ஆறு என்னும் சொல்நெறி மரபு என்னும் பொருளுடையதாக அமைகிறது. எனவே மரபு என்பதற்குத் தொன்றுதொட்டு வருவது, முறைமையானது, மாற்றுவதற்கு அரியது, திரிபில்லாச் சொற்களால் வழங்கு வது எனத் தொல்காப்பியர் கருதியுள்ளார் என்பது தெளிவு.

## மரபு பற்றிய உரையாசிரியர்களின் கருத்துகள்

### இளம்பூரணர்

**"நூற்கு இன்றியமையாத இயல்பு"** என நூன்மரபு பற்றி உரைத்துள்ளார் (தொல் மரபு 95, இளம் உரை)

### பேராசியர்

"மரபு என்பது காலமும் இடனும் பற்றி வழக்குத் திரிந்த காலும் திரிந்தவற்றுக்கு ஏற்பட வழுப்படாமைச் செய்வதோர் முறைமை" (செய்-1 உரை) எனவும், **"வழக்கினகத்து வரலாற்று முறைமை பிறழாது வருதலே தக்கது"** (மர.90 உரை) எனவும், பேராசிரியர் உரைத்துள்ளார். இதனால் வரலாற்று முறைமை பிறழாது வருதல் மரபு என்பதும், காலம், இடம் ஆகியவற்றால் திரிந்தாலும், திரிந்தவற்றுக்கு ஏற்ப மரபு வழுப்படாமல் செய்வது என்பதும் விளங்குகிறது.

**"இறையனார் களவியல் உரைகாரர் "மரபு" எனினும்,**

**"இலக்கணம்" எனினும் ஒரு பொருட் பன்மொழி என்று கருதுகின்றார்"[5]. நச்சினார்க்கினியர் "காலந்தோறும் இடந்தோறும் வழக்குத் திரிந்தவற்றிற்கேற்ப வழுப்படாமற் செய்வதோர் முறைமை"[6]** என்று குறிப்பிடுகின்றார்.

சேனாவரையர் மரபிற்கு விளக்கம் கூறுமிடத்து,

**"பிறிதோர் காரணம் பற்றாது ஒரு
பொருட்குரிய வழக்கு ஒரு
பொருள்மேற் சென்றதெனப்படும்"[7]** என்பர்.

மேற்கூறிய கருத்துகளைப் பின்பற்றித் தொல்காப்பியத்தின் வழி நூலாகக் கருதப்படும் நன்னூல், மரபு என்பதற்கு

**எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு
உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"[8]**

என்பதால் முன்னோர் ஒரு பொருளுக்கு வழங்கிய சொல்லாலே பின்னோரும் வழங்குவது மரபாகும் எனத் தெளிவான விளக்கம் தந்துள்ளார் நன்னூலாசிரியர் பவணந்தியார். நன்னூலுக்கு உரையெழுதிய சங்கர நமச்சிவாயர் மரபினைப் பற்றிக் கீழ்வருமாறு கூறியுள்ளார் இதனை

**"யாதொரு பொருளை யாதொரு
சொல்லான் யாதொரு
நெறியான் அறிவுடையோர்
சொன்னார்களோ"[9]**

அப்பொருளை அச்சொல்லான் அந்நெறியாற் சொல்லுதல் மரபாம் என்பர்.

மரபு பற்றிய பிற்காலப் பாட்டியல் நூல் குறிப்பிடும்போது,

**முன்னோர்கள் சென்ற நெறியில் சென்று செய்திகளைத் தொகுத்துத் தருகின்ற காரணியம் பற்றி நூற்கு மரபு என்றொரு பெயரும் உண்டு"[10]** என்கிறது. இதனால் மரபிற்கு நூல் என்ற மற்றொரு பெயரும் உண்டென்பதனை அறியலாம்.

### அறிஞர்கள்

**"மரபு என்பது தொன்று தொட்டு
வருவது அறிவான்
உயர்ந்தோரால் உண்டாக்கப்பட்டு வழங்கி
வருவதாகும்"[11]**

என்கிறார் சி.இலக்குவனார்.

**"தொடர்ந்து வரும் பழக்க வழக்கங்களையும் சொல் வழக்காற்றையும் மரபு என்பதுமுண்டு தொல்காப்பியத்திலுள்ள மரபியல் என்னும் இயற்பெயர் இப்பொருள் பற்றியது"[12]** எனத் தேவநேயப் பாவாணர் கூறுகிறார்.

"மரபு என்னும் இச்சொல் இலக்கணம் என்ற பொருளிலும் தொன்றுதொட்டுப் பொருட்டு

க்குரியனவாய் வழங்கிவரும் சொல் மரபு என்ற பொருளிலும் நெடுங்காலமாக வழங்கி வருகின்றது"[13] என க. வெள்ளைவாரணனார் உரைக்கிறார்.

"பன்னெடுங்காலம் பழக்கத்தின் விளைவே மரபு காலங் காலமாக வழங்கப்பட்டு முடிவான நிலையைப் பெறுவதே மரபு"[14] என அ. ம. சத்தியமூர்த்தி உரைத்துள்ளார்.

இவற்றின் மூலம் மரபு என்பது உயர்ந் தோர்களால் உருவாக்கப்பட்டுத் தொன்று தொட்டு வருவது, தொடர்ந்து வரும் பழக்க வழக்கங்களும் அவற்றது சொல் வழக்கும் மரபு, பன்னெடுங்காலம் பழக்கத் தின் விளைவும் மரபு என அறியமுடிகிறது.

## நிகண்டுகள்

மரபு பாரம்பரியம் முறைமை (திவாகர நிகண்டு 1509) எனவும்

மரபொ ழுக்கமுந் திரட்சியும் மகாரு
மிடமும் பின்னு முறைமையும் வழியே
(பிங்கல நிகண்டு 4041)

எனவும், மரபு என்னும் சொல்லின் பொருள்களைச் சுட்டுகின்றன.

சிரகமே கரகம் ஆகும். சென்னியின்
சோடும் அப்பேர்
கரகமே ஆலங்கட்டி, கமண்டலம், துளிநீர்
கங்கை,
மரபுதான் முறைமை, தொன்மை, மறல்
எனப, பிணக்கும்கூற்றும்
சரபம் எண்கால் புள் என்ப. வரை ஆடு
தானும் ஆமே. (சூடாமணி நிகண்டு 12வது ரகர எதுகைப் பாடல் 1)

என "மரபு'க்கான பொருள்களாக "முறைமை" "தொன்மை" எனும் பொருண்மைகளைச் சூடாமணி நிகண்டு குறிப்பிடுகிறது.

மேலும் மரபு என்பது உலகிலுள்ள இருதிணைப் பொருளையும் இரு வகை வழக்காகிய உலக வழக்கு நாடக வழக்கு என்ற நிலைகளில் சான்றோர்களால் தொன்றுதொட்டு வழங்கிவரும் முறைமை யாகும் என்பதைச் சான்றுகளால் அறியலாம்.

## முடிவுரை

மரபை மொழிமரபு, இலக்கிய மரபு, சமுதாய மரபு, வணிக மரபு, தொழில் மரபு, திருமண மரபு, இல்லற மரபு, என்று பிரித்துக்காட்ட முடிகிறது. மொழியைக் கையாள்வதில் பின்பற்றப்பட்டு வரும் மரபை மொழி மரபு என்கிறோம். இலக்கியத்தில் வடிவம் பாடு பொருள் போன்றவற்றுள் பின்பற்றப்பட்டு வரும் மரபை இலக்கிய மரபு என்கிறோம். வணிகர்கள் பலரால் பின்பற்றப்பட்டு வரும் மரபை வணிக மரபு என்கிறோம். இவ்வாறு மரபு என்னும் சொல் பதினைந்திற்குக் குறையாத பொருட்களை வழங்கி வந்திருப்பதை காண முடிகிறது. மேலும் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த நெறிப்படி நம் சான்றோர்கள் வழிவழியாக வந்தார்களோ அந்தப் பொருளை அந்தச் சொல்லால் வழங்குதலே மரபாகும். பழைய மரபு மாறலும் புதிய மரபு சேரலும் எந்த மொழியிலும் இயல்பான ஒன்றே.

## அடிக்குறிப்புகள்

1. தொல் பொருள் மரபு பேராசிரியர் உரை நூ-1, பக் - 433
2. புறநானூறு - 25
3. திருக்குறள் - 128
4. சீவகசிந்தாமணி - 842
5. ச.கிருட்டிணமூர்த்தி உரைச் சொற்களஞ் சியம் பக் - 204
6. தொல்-பொருள், செய்யுளியல் நூற்பா-1
7. தொல் - சொல், சேனாவரையர் நூ -1
8. நன்னூல் - சொல், பொது நூ - 388
9. நன்னூல் - சொல், பொருள் நூ - 359
10. மருதூர் அரங்கராசன் இலக்கண வரலாறு பாட்டியல் நூல்கள் பக் - 228
11. சி.இலக்குவனார் தொல்காப்பிய ஆராய்ச்சி, பக் - 250
12. ஞா. தேவநேயப்பாவாணர் சொல்லாரா ய்ச்சிக் கட்டுரைகள் பக் - 3
13. க.வெள்ளைவாரணனார் தொல்காப்பியம் பொருள், மரபியல் உரைவளம் பக் - 5
14. அ.ம.சத்தியமூர்த்தி, தொல்காப்பிய மரபியல் ஓர் ஆய்வு பக்-9